**கவனிக்க.-** *11.04.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1755 - 2012 අප්‍රේල් මස 20 වැනි සිකුරාදා - 2012.04.20

*1755 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 812 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பதவிகள் வெற்றிடம்

## சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012

1. சப்பிரகமுவ மாகாண சபைப் பிரதான செயலாளர் (நிர்வாகம் மற்றும் பயிற்சி) அலுவலகத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட அலுவலர் தரம் III பதவிக்காக இவ்வறிவித்தலில் கூறப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து (ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அரச சுற்றுநிரூபம் 15/90 இல் குறிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டத்தில் குறிககப்பட்டுள்ள புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் பெறும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தகுதியானவர் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர். இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினைச் சார்ந்ததாகும்.

3. **பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்** : ரூபா 22,935 - 10×645- 8×790 - 17 × 1050- ரூபா 53,555

(அரச நிர்வாக சுற்று நிரூபம் 6/2006 இன்படி SL-1 -2006 இன் ஆரம்பப் படி)

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதாகும்.

5. **தகைமைகள்**.- சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கீழ்காணும் தகைமைகள் உரியவையாகும்:-

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருப்பதோடு, சப்பிரகமுவ மாகாண நிருவாகப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஆ) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 24 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையது அல்ல.)

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் உள நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்;

(ஈ) கீழ்க் குறிப்பிடப்படும் கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்:-

(i) இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சேர்ந்திருக்கும் ஒருவராக இருத்தல்; அத்துடன்

(ii) சட்டத்தரணியாக 03 வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல்;

(iii) அரசியல் யாப்பு, மாகாண சபைச் சட்டம் மற்றும் அதற்குரிய உப சட்டங்கள் பற்றிய செயல்முறை அறிவுள்ளவராய் இருத்தல்.

6. **கடமை விபரம்** :- (i) சப்பிரகமுவ மாகாண சபை நிறுவனங்களுக்கான வழக்குகளில் அவற்றுக்காக நிறுவனங்கள் சார்பாக ஆஜராகுதல்;

(ii) தேவையான சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபருக்கு அறிக்கைகளை வழங்குதலும் உதவிச் சட்டத்தரணியாகச் செயற்படுதலும்;

(iii) வழக்குகளில் முன்வைப்பதற்காக வழக்குகளில் பிரதிநிதியாக இருப்பதற்கு அதிகாரம் பெறும் ஆவணம் தற்காப்பு எதிர்வாதம், ஆட்சேபனை, எதிர்மறுப்பு ஆட்சேபனை பதில்கள், எதிர்வாதங்கள் ஆகியவற்றின் எழுத்து மூலமான வடிவங்களைத் (உரைகளைத்) தயாரித்தல்;

(iv) முறையீட்டுப் பத்திரங்கள் மற்றும் குற்றச்சாட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்;

(v) சப்பிரகமுவ மாகாண சபை, உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் வேறு திணைக்களங்களிலிருந்து கிடைக்கும் ஆலோசனைப் படி உறுதிகள், குத்தகை உறுதிகள் மற்றும் ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், காணிப் பதிவு அலுவலகத்தில் அந்த உறுதிகளைப் பதிவு செய்தல், மாதாந்த அறிக்கையைக் காணிப் பதிவு அலுவலகத்திற்கு அனுப்புதல் மற்றும் உறுதிகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் பதிவேடுகளைப் பேணுதல்;

(vi) சட்டவாக்கங்கள் (சாசனங்கள்) உப யாப்புக்கள், சட்ட ஆணை நகல்கள் ஆகியவற்றைத் தயாரித்தலும், தேவையான திருத்தங்களை முன் வைத்தலும்;

(vii) சப்பிரகமுவ மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக் களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவை வேண்டுகின்ற நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

7. **விண்ணப்பப்படிவங்கள்** :- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 (செ.மீ.21 - செ.மீ. 29) அளவுடைய தாளை உபயோகித்து,

* இலக்கம் 1 இலிருந்து 8 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் இலக்கம் 9 இலிருந்து மீதிப் பந்திகள் மறு பக்கத்திலும் வரும் விதத்தில் ஒழுங்குபடுத்தி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும்;
* மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தல் ஆகியவற்றிற்கு அமையாத விண்ணப்பப்பத்திரங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
* விண்ணப்பப்படிவங்கள் தபாலில் தவறுதல் அல்லது தாமதமாதல் ஆகியவற்றிற்காகச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கு எடுக்கப்படமாட்டாது.
* தற்போது அர,ச மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தங்களால் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை நிறுவனத் தலைவர்களினூடாக அவர்களின் சிபரிசு உடன் அனுப்புதல் வேண்டும்;
* பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2012.05.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கீழ்க் காணப்படும் முகவரிக்குக்

கிடைக்கும் வண்ணம் ''செயலாளர் மாகாண அரச சேவை ஆணைக்குழு மாகாண சபை கட்டடத் தொகுதி, சப்பிரகமுவ மாகாணம், புதிய நகரம், இரத்தினபுரி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்'' என்று குறிப்பிடப்படல வேண்டும்.

சுனேத்திரா குணவர்த்தன,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சப்பிரகமுவ மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சப்பிரகமுவ மாகாண அரச சேவையில் சட்ட அலுவலர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2012**

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

(ii) முழுப் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

(iii) முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. (i) நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

(ii) நிரந்தர முகவரி :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

3. (i) பிறந்த திகதி :-----.

(ii) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது:-

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

5. பால் (ஆண்/பெண்) :-----.

6. விவாகமானவர்/விவாகமாகாதவர் :-----.

7. இலங்கைப் பிரஜையாவது பிறப்பினாலா? பதிவினாலா? :-----.

8. தற்போது அரச/மாகாண அரச சேவையிலுள்ளவராயின் வகிக்கும் பதவி பற்றிய விபரம் :-----.

(i) பதவி :-----.
(ii) நிரந்தரமானதா? தற்காலிகமானதா? :-----.
(iii) ஓய்வூதியம் உரித்துடையதா? ஓய்வூதியம் உரித்தற்றதா? :----.
(iv) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா? :-----.
(v) தற்போது சேவை புரியும் நிலையம் :-----.
(vi) மாதாந்தச் சம்பளம் :-----.

9. **கல்வித் தகைமைகள் :-**

| பெற்றுள்ள பட்டம் அல்லது சித்தியடைந்துள்ள பரீட்சை | பட்டம் அல்லது பரீட்சை செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் | பெற்றுள்ள சித்தி (தரம்) | பல்கலைக் கழகத்தின் அல்லது நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. வேறு மேலதிக தகைமைகள் :-----.

11. சட்டத்தரணி ஒருவராக பெற்றுள்ள அனுபவங்கள் பற்றிய விபரம் :-----.

12. விண்ணப்பதாரி எப்போதாவது அல்லது எதுவித குற்றத்திற்காகவாவது நீதிமன்றத்தினால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளீரா ? :-----.

ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடவும் :-----.

13. விண்ணப்பதாரி அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளீரா ? :---.
ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடவும் :-----.

14. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் உறுதிமொழிகின்றேன். தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு இங்கு குறிப்பிடப்பட்ட ஏதாவது தரவுகள் பொய்யானவை எனத் தெரியவருமிடத்து நான் தகைமை அற்றவனாவேன் என்பதையும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நன்கு அறிவேன்.

திகதி :-----.

-----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி / செல்வி.............. யை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் அவர் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்,
(பதவி முத்திரையை இடவும்).

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவியும் நிலையும் :-----.
திகதி :-----.

( இவ் உறுதிப்பாடு அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/ சத்திய ஆணையளர்/முப்படைகளில் அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகள்/ பொலீஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளில் பதவி வகிக்கும் அதிகாரி அல்லது ரூபா 240,360 இற்கு மேல் வருடாந்தச் சம்பளம் பெறும் அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

***16. அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகளுக்காக திணைக்கள/ நிறுவனத் தலைவரினால் செய்யப்படும் சிபாரிசு.***

(i) இவ்விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ............ இவ் அமைச்சில்/இத்திணைக்களத்தில்/ இந்நிறுவனத்தில்................. ஆகச் சேவை புரிகின்றார் என்றும் அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமானது என்றும் சேவைக் காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உட்படவில்லை என்றும் அவருடைய சுயவிபரக் கோவையின்படியும் நியமனக் கடித இலக்கம் .......... படியும் அவர் மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் அவை சரியானவை என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

(ii) அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

...........................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(பதவி முத்திரையை இடவும்).

திகதி :-----.
பெயர் :-----.
பதவி :-----.
இடம் :-----.

4-523